டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 6.08.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 042 - Madurai | Online Edition

# தமிழக பட்ஜெட் 2026-27 தாக்கல்

- **2036க்குள் 1.5 டிரில்லியன் பொருளாதாரத்தை அடைவதே இலக்கு**
- **அரசுப்பள்ளிகளில் சூப்பர் கிளீன்- சூப்பர் கேம்பஸ் திட்டம்**
- **2500 ஹெக்டரில் அலையாத்தி காடுகள் உருவாக்க திட்டம்**
- **வேளாண் துறைக்கு ரூ.14984 கோடி நிதி ஒதுக்கீடு**

சென்னை, ஆக,5

2026-27ம் ஆண்டிற்கான பொது பட்ஜெட்டை, தாக்கல் செய்ய நேற்று தமிழக பட்ஜெட் கூட்டத்தொடர் கூடியது.

நடப்பு நிதியாண்டுக்கான பட்ஜெட்டை நிதியமைச்சர் மரிய வில்சன் தாக்கல் செய்து பேசுகையில், வளர்ச்சியே அரசின் லட்சியம், 2036க்குள் 1.5 டிரில்லியன் பொருளாதாரத்தை அடைவதே இலக்கு என்றார். மேலும், மதுபான உற்பத்தி ஆலைகளுக்கான சிறப்புக் கட்டணம் மூலம் அரசுக்கு கூடுதலாக ரூ.1,000 கோடி வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசின் பல்வேறு நடவடிக்கை மூலம் அரசுக்கு ரூ.15,000 கோடி கூடுதலாக கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலத்தின் வருவாயை அதிகரிக்க வருவாய் மேம்பாட்டுக் குழுவை விரைவில் அரசு அமைக்கவுள்ளது என்றார்.

**பட்ஜெட் முக்கிய அம்சங்கள் ஓர் பார்வை**

ரூ.139 கோடி மதிப்பீட்டில் 10,000 அரசுப்பள்ளிகளில் சூப்பர் கிளீன்- சூப்பர் கேம்பஸ் திட்டத்தை அரசு செயல்படுத்த உள்ளது.

3734 பள்ளிகளை ரூ.2132 கோடியில் நவீனப்படுத்தும் திட்டம்.

பள்ளி பாடத் திட்டத்தை மறுசீரமைக்க ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

9-12-ம் வகுப்பு மாணவர்களுக்கு விலையில்லா சீருடை, புத்தகம்- ரூ.122 கோடி

2026-27 நிதி ஆண்டில் பள்ளி கல்வித்துறைக்கு 44,527 கோடி ஒதுக்கீடு

பதிவுத்துறையில் செய்த சீர்திருத்தம் மூலம் ஆண்டுக்கு கூடுதலாக ரூ.15000 கோடி வருவாய் கிடைக்கும்.

மீனவர்களுக்கான மீன்பிடி உதவித் தொகையை ரூ.6000-ல் இருந்து ரூ.7000 ஆக உயர்த்தப்படும்.

தொழிலாளர் நலத்துறைக்கு ரூ.2022 கோடி - சிறப்பு திட்ட செயலாக்கத்திற்கு ரூ.17,150 கோடி ஒதுக்கீடு

தொழில்முனைவு ஆர்வத்தை மேம்படுத்த வெற்றித்திறன் பயிற்சி திட்டம் - ரூ.150 கோடி ஒதுக்கீடு

வெற்றி தொழில் முனைவோர் திட்டம் - ரூ.75 கோடி ஒதுக்கீடு

ஹஜ் மானியம் - ரூ.25,000ல் இருந்து ரூ,35,000 ஆக உயர்வு

சமூக நீதித்துறைக்கு ரூ.3,937 கோடி ஒதுக்கீடு

திருமணமாகும் பெண்களுக்கு ஒரு சவரன் தங்க நாணயம் மற்றும் பட்டுப்புடவை அண்ணனின் சீர் வரிசை திட்டடத்திற்கு ரூ.812 கோடி ஒதுக்கீடு

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்- அரசு மருத்துவ மனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு 1 கிராம் தங்க மோதிரம்

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை - ரூ.1458 கோடி ஒதுக்கீடு

மூத்தகுடிமக்கள் பாதுகாப்பு இல்லம் - ரூ.6.6 கோடி ஒதுக்கீடு

மூத்த குடிமக்களுக்கு முதற்கட்டமாக 5 மாவட்டங்களில் பொழுதுபோக்கு மையம்.

திருநங்கைகள் தங்குவதற்கு 5 மாவட்டங்களில் அரண் தங்கும் விடுதிகள் அமைக்கப்படும்.

5 மண்டலங்களில் புற்றுநோய் பராமரிப்பு மையங்கள் - திட்ட அறிக்கைக்கு ரூ.10 கோடி ஒதுக்கீடு

சுகாதாரத்துறைக்கு ரூ.23,357 கோடி ஒதுக்கீடு

கூட்டுறவு துறைக்கு ரூ.8028 கோடி ஒதுக்கீடு

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

ரூ.5932 கோடியில் பயிர் கடன் தள்ளுபடி செய்ய முதலமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

விவசாயிகளுக்கான மின் மானித்திற்கு ரூ.7,432 கோடி ஒதுக்கீடு

வேளாண் துறைக்கு ரூ.14984 கோடி நிதி ஒதுக்கீடு

கால்நடை, பால்வளம், மீன்வளத்துறை- ரூ.4880 கோடி ஒதுக்கீடு

பின்தங்கிய மாவட்டங்களில் ரூ.3200 கோடியில் புதிய சிப்காட் தொழில் பூங்காங்கள் உருவாக்கப்படும.

குறுசிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் - ரூ.352 கோடி மானியம்

தமிழ்நாடு பனை மேம்பாடு கழகம் அமைக்கப்படும்-ரூ.16 கோடி ஒதுக்கீடு

பசுமை எஃகு உற்பத்தி முன் முயற்சி - ரூ.60 கோடி நிதி ஒதுக்கீடு

சிறுகுறு நடுத்தர தொழில்துறைக்கு ரூ.2142 கோடி ஒதுக்கீடு

கைத்தறி, கைத்திறன், துணிநூல், கதர் துறைக்கு ரூ.1678 கோடி நிதி ஒதுக்கீடு

பனை விவசாயிகளின் நலனை பாதுகாக்க நடவடிக்கையாக தமிழ்நாடு பனை விவசாயம் பாதுகாப்பு கழகம் அமைக்கப்படும்

புதிய தொழிற்கொள்கை வெளியிடப்படும். வழிகாட்டு 3.நு என்ற புதிய வழிகாட்டி வெளியிடப்படும்.

சென்னை மாநகரில் அனைத்து நுகர்வோருக்கும் ஸ்மார்ட் மீட்டரில் நவீன மின்சார சேவை

ரூ.5050 கோடியில் வெள்ளிமலை நீரேற்று புனல்- மின் திட்டம் விரைவுபடுத்தப்படும்.

எரிசக்தி துறைக்கு ரூ.15,828 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

முதலமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாடு திட்டம்- ரூ.2117 கோடி ஒதுக்கீடு.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?



**8. வெங்காய சூப்**

**தேவையான பொருட்கள்**

பெரிய வெங்காயம் — 3

வெண்ணெய் — 1 டீஸ்பூன்

மிளகு தூள் — ½ டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

**செய்முறை**

வெங்காயத்தை பொன்னிறமாக வதக்கி தண்ணீர் சேர்த்து 10 நிமிடம் கொதிக்கவிட்டு பரிமாறவும்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# தாராபுரம் மற்றும் குண்டடம் வட்டாரத்தில் பூச்சி மருந்து விற்பனை நிலையங்களில் வேளாண்மை அதிகாரிகள் ஆய்வு



திருப்பூர், ஆக.5

வேளாண்மை இயக்குனர் சென்னை, உத்தரவின் படி, திருப்பூர் மாவட்டத்தின் வேளாண்மை இணை இயக்குனர் ஆதி சாமி அறிவுரையின்படி, தாராபுரம் மற்றும் குண்டடம் வட்டாரத்தில் அரியலூர் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது வேளாண்மை உதவி இயக்குனர்அஜித் மற்றும் பொம்மூராஜ், வேளாண்மை அலுவலர் கவிப்பிரியா ஆகியோர் கலந்து கொண்டனர். வட்டாரத்தில் உள்ள தனியார் பூச்சி மருந்து விற்பனை நிலையங்களை ஆய்வு செய்யப்பட்டது. விற்பனை நிலையங்களில் பூச்சிக்கொல்லி மருந்து இருப்புகள், முதன்மை சான்றுகள், விற்பனை பில் விவசாயிகளுக்கு அவர்கள் முகவரியுடன் தொலைபேசி எண்ணில் குறிப்பிடப்பட்டு உள்ளதா, என்பதை எல்லாம் ஆய்வு செய்தார்கள். ஆய்வின் போது பூச்சி மருந்து கட்டுப்பாட்டு சட்டம் 1968 மற்றும் பூச்சி மருந்து விதிகள் 1971ன் படி ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வில் பூச்சி மருந்து கட்டுப்பாட்டு சட்டத்தை மீறிய பூச்சி மருந்து விற்பனை நிலையங்களுக்கு விற்பனை தடை விதிக்கப் பட்டுள்ளது. பூச்சி மருந்து விற்பனை உரிமம் பெற்ற அனைவரும் விலைப்பட்டியல் கண்டிப்பாக பராமரிக்க வேண்டும்.

விற்பனை பில்லில், விவசாயிகளின் அனைத்து விவரமும் இடம் பெற வேண்டும். மற்றும் விவசாயி அவர்கள் பூச்சி மருந்து என்பதை அறிந்து கொண்டு இதை விவசாயத்துக்கு மட்டுமே

பயன்படுத்த வேண்டும் என்பதில் கையொப்பம் போடச் சொல்லி விவசாயிக்கு விற்பனை பில் தர வேண்டும். பூச்சி மருந்து இருப்பு ஸ்டாக் புக்கில் உள்ள இருப்பும் சரியாக இருக்க வேண்டும், விவசாயிகளுக்கு உரிய விலையில் விற்பனை செய்ய வேண்டும். எப்போதும் பூச்சி மருந்து கட்டுப்பாட்டு சட்டத்தின் படியும் பூச்சி மருந்து விதியின் படியும் நடந்து கொள்ள அறிவுரை செய்யப்பட்டது.



மற்றும் விவசாயிகளுக்கு உயிரியல் பூச்சிக்கொல்லிகள் மற்றும் பூஞ்சானம் கொல்லிகள் எடுத்துச் சொல்லி அவற்றின் பயன்களையும் மற்றும் அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறி பூச்சி மருந்து பயன்பாட்டை குறைத்து அதிகளவு உயிரியல் கட்டுப்பாட்டு முறையை கடைப்பிடிக்க விவசாயிகளிடம் எடுத்துக் கூற வேண்டும். விவசாயிகளுக்கு சாகுபடி செய்யும் பயிர் களுக்கு பரிந்துரைக்கப்பட்ட அளவுகளுக்கு மட்டுமே பூச்சி மருந்து, பூஞ்சான மற்றும் களைக்கொல்லி, மருந்துகளை வழங்க வேண்டும். மேற்கண்ட வகையில் மருந்துகளை வழங்கிய பின் விவசாயிகளுக்கு கண்டிப்பாக விற்பனைக்கு பில் அவசியம் தர வேண்டும். உடனடியாக ஸ்டாக் புக்கில் கழிக்கவும் வேண்டும் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.



# ஹேரன்ஸ்ரோவர் வேளாண் அறிவியல் மையம் விஞ்ஞானிகள் மற்றும் வேளாண் உதவி இயக்குநர் இணைந்து நடத்திய வயல்வெளி ஆய்வு

பெரம்பலூர், ஆக.5

பெரம்பலூர் மாவட்டம், செங்குணம் கிராமத்தில் ஹேரன்ஸ்ரோவர் வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானி முனைவர் மு.புனிதாவதி, மாவட்ட வேளாண் உதவி இயக்குனர் ஆ.தாகூர், வேளான் அறிவியல் மைய மண் ஆய்வக அலுவலர் ந.சதீஷ்குமார், வேளாண்



அலுவலர்கள் மற்றும் வேளாண் உதவி அலுவலர் வளர் ஆகியோர் வயல்வெளி ஆய்வு மேற்கொண்டனர். மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெப்பஅலை (Heat Wave) காரணமாக மக்காச்சோளப் பயிரில் இலைகள் கருகுதல் (Leaf Scorching) மற்றும் ஆண் பூ (Tassel) கருகுதல் போன்ற பாதிப்புகள் பெரும்பாலான பகுதிகளில் காணப்படுகின்றன. இது பொதுவாக அதிக வெப்பநிலை (38–42°C அல்லது அதற்கு மேல்), குறைந்த காற்றின் ஈரப்பதம் மற்றும் மண் ஈரப்பதக் குறைவு ஆகியவற்றால் ஏற்படுகிறது என கூறினர்.



ஆய்வின் போது மக்காசோளத்தில் இலை நுனி மற்றும் ஓரங்களில் பழுப்பு நிற மற்றும் வெள்ளை நிற கருகல், மேல் பகுதி இலைகள் சுருண்டு வாடுதல், ஆண் பூ (Tassel) கருகுதல் போன்ற அறிகுறிகள் தென்பட்டது.

இப்போது பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோளமானது கதிர்மணிகள் 70% உருவாகி உள்ளது. இதனால் மகசூல் பாதிக்க வாய்ப்புகள் குறைவாகவே உள்ளது.

**மேலாண்மை ஆலோசனைகள்**

1. மண் ஈரப்பதத்தை பராமரிக்கவும்

2. தேவைக்கேற்ப உடனடியாக பாசனம் செய்யவும்.

3. தண்ணீர் பற்றாக்குறை இருந்தால் குறைந்த இடைவெளியில் இலகு பாசனம் அளிக்கவும்.

4. மூடாக்கு அமைத்து அதாவது, தென்னை ஓலை, வைக்கோல் அல்லது பயிர் எச்சங்களை பரப்பி மண் ஈரப்பதத்தைப் பாதுகாக்கவும்.

5. இலைவழி ஊட்டச்சத்து தெளிப்பு : 1% பொட்டாசியம் நைட்ரேட் (13:0:45) (10 கிராம்/லிட்டர்) தெளிக்கலாம். அல்லது 1% பொட்டாசியம் சல்பேட் (றீநுஊ) தெளிப்பும் வெப்ப அழுத்தத்தை குறைக்க உதவும் அல்லது மெத்தைலோபாக்டீரியம்ஏக்கருக்கு ஒரு லிட்டர் தெளித்தல் அவசியம்.

6. எதிர்காலத்திற்கு : வறட்சியைத் தாங்கக் கூடிய மக்காச்சோள ரகங்களைத் தேர்வு செய்யவும்.

7. பருவத்திற்கு ஏற்ற விதைப்பை மேற்கொள்ளவும்.

8. மண் கரிமப்பொருளை அதிகரித்து நீர்பிடிப்புத் திறனை மேம்படுத்தவும்.

இதில் 12 விவசாயிகள் கலந்து கொண்டனர்,

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# மரபணு திருத்த செயல்முறை பயிற்சி

கோயம்புத்தூர், ஆக.5

வேளாண்மை பல்கலைக்கழக தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர்தொழில்நுட்பவியல் மையம், தாவர உயிர் தொழில்நுட்பவியல் துறை சார்பில், "பயிர் தாவரங்களில் மரபணு திருத்தம்" குறித்த நான்கு நாள் செயல்முறை பயிற்சி ஆகஸ்ட் 4 ஆம் தேதி துவங்கியது. இந்த பயிற்சியில், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களைச் சேர்ந்த 27 மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் பங்கேற்றனர்.



துவக்க விழாவில், துறை இயக்குநர் முனைவர் N.செந்தில் பங்கேற்று துவக்க உரையாற்றினார். அவர் தனது உரையில் உலகளவில் மேற்கொள்ளப்பட்ட பயிர் மரபணு திருத்த பணிகளை விளக்கினார், மேலும் பயிர் மேம்பாட்டில் மரபணுத் திருத்தத்தின் முக்கியத்துவத்தை லியுறுத்தினார்.

முனைவர் M.ரவீந்திரன், ஆராய்ச்சி இயக்குநர், தனது சிறப்புரையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட மரபணுத் திருத்த ஆராய்ச்சிப் பணிகளை விரிவாக எடுத்துரைத்தார். குறிப்பாக, மரபணு திருத்தம் மூலம் நெல் விளைச்சல் மேம்பாட்டில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் செய்த சாதனைகளைத் தன் உரையில் எடுத்துரைத்தார். தாவர உயிர் தொழில்நுட்பவியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் E.கோகிலாதேவி வரவேற்புரை வழங்கி, பல்கலைக்கழகத்தில் நடைபெறும் மரபணு திருத்த பணிகளை விளக்கினார். நன்றி உரையை தாவர உயிர்தொழில்நுட்பத் துறையின் பேராசிரியர் முனைவர் K.K.குமார் வழங்கினார்.

# மழை நீர் சேகரிக்க, களைகள் மற்றும் பூச்சி நோய் கட்டுப்பாட்டிற்கு கோடை உழவு

கோடை உழவு என்பது அறுவடைக்குப் பிறகு, கோடை காலத்தில் நிலத்தை ஆழமாக உழும் முறையாகும். இதனால் கீழ்கண்ட நன்மைகளை பெறலாம்.



- பூச்சி மண்ணில் மறைந்திருக்கும் பூச்சிகளின் முட்டை, புழு, கூட்டுப்புழு போன்றவை வெயிலால் அழிகின்றன. பல நோய்களை ஏற்படுத்தும் நுண்ணுயிரிகளின் தாக்கம் குறைகிறது.

- களை விதைகள் மண்ணின் மேற்பரப்புக்கு வந்து கடும் வெயிலில் முளைப்புத் திறனை இழக்கின்றன. அடுத்த பருவத்தில் களை வளர்ச்சி குறையும்.

- மண் தளர்வாக இருப்பதால் மழைநீர் எளிதாக ஊடுருவி நிலத்தடி நீர் சேமிப்பு அதிகரிக்கிறது. ஓடி வீணாகும் நீரின் அளவு குறைகிறது.

- மண்ணில் காற்றோட்டம் அதிகரிக்கிறது. நுண்ணுயிரிகளின் செயல்பாடு மேம்பட்டு சத்துக்கள் பயிர்களுக்கு எளிதில் கிடைக்கின்றன.

- மண்ணின் இறுக்கம் குறைந்து வேர்கள் ஆழமாக வளர உதவுகிறது. பயிர் வளர்ச்சி சிறப்பாக அமையும்.

- அறுவடைக்குப் பிறகு உள்ள தழை, தண்டு போன்றவை மண்ணுடன் கலந்து இயற்கை உரமாக மாறுகின்றன.

- மண் ஆரோக்கியம் மேம்படுவதால் பயிர்கள் நன்றாக வளர்ந்து அதிக மகசூல் கிடைக்கும்.

ஏப்ரல் முதல் பருவ மழை ஆரம்பிக்கும் முன் கோடை மழையை பயன்படுத்தி செய்வது சிறந்தது. பொதுவாக 20—30 செ.மீ. ஆழத்தில் உழுவது நல்ல பலன் தரும். விருதுநகர் மாவட்ட விவசாய பெருமக்கள் கோடை உழவு செய்து பூச்சி, நோய், களைகள் குறைதல், மழைநீர் சேமிப்பு, மண் வளம் மற்றும் காற்றோட்டம் அதிகரித்தல், வேர்வளர்ச்சி மேம்பாடு, அதிக மகசூல் போன்ற பல நன்மைகள் பெறலாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தகவல் : மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் மு.இராம சுப்ரமணியம் மற்றும் உழவியல் துறை முனைவர் த.சம்பத்குமார், வேளாண் அறிவியல் நிலையம், அருப்புக்கோட்டை.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# லாபம் தரும் கொப்பரை தேங்காய் தயாரிப்பது எப்படி?



தமிழகத்தில் 4 லட்சம் ஏக்கரில் 12 கோடி தென்னை மரங்கள் உள்ளன. அதிலும் கோவை, திருப்பூர் மாவட்டத்தில் மட்டும் 36000 ஏக்கர் பரப்பளவில் 1.5 கோடி தென்னை மரங்கள் உள்ளன. தமிழகத்தில் 75% தென்னை மரங்கள் நாட்டு வகையை சேர்ந்தவை. இவை கொப்பரை உற்பத்திக்கு ஏற்றவை.

**தேங்காயை கொப்பரை (COPRA) மாற்றுவது எப்படி?**

குலை தள்ளிய தேங்காய்களில் பறித்து 55 நாட்கள் கிடப்பில் போட்டு வைத்து பின்னர் மட்டைகளை உரித்து தேங்காய் எடுக்க வேண்டும். பின்னர் அதனை இரண்டாக உடைத்து, வெயிலில் 2 நாளாக காய வைக்க வேண்டும். அப்போது ஓட்டிலிருந்து, (தேங்காய்) பருப்பு தனியாக வெளியேறும் வகையில் வளைந்து கொடுக்கும். அதை கத்தியால் நெம்பினால் பருப்பு மட்டும் தனியாக பந்து போல வந்துவிடும்.

**காய வைத்தல் (DRYING)?**

தொடர்ந்து அவற்றை நல்ல வெயிலில் 3 நாளும் இளம் வெயிலில் 5 நாளும் காயவைத்தால் தேங்காய் பருப்பில் ஈரப்பதம் 100% குறையும். காயவைத்த தேங்காய் பருப்பை கையில் வைத்து அழுத்தி பாருங்க. அப்போது அது உடைந்தால் கொப்பரை தேவையான அளவு காய வில்லை என்று அர்த்தம், கொப்பரை உடையாமல் வளைந்து கொடுத்தால் போதுமான அளவு காய்ந்து விற்பனைக்கு தகுதியாகி விட்டது என்பதை அறியலாம்.

**சேமிப்பது எப்படி?**

காயவைத்த தேங்காய் பருப்பு தான் கொப்பரை. இதனை 50 கிலோ, 100 கிலோ மூட்டைகளில் கட்டி 3 மாதம் வரை இருப்பு

வைக்கலாம். இருப்பு வைக்கப்படும் ஒவ்வொரு நாளும் 50 கிலோ மூட்டைகளில் கால் கிலோ அளவிற்கு எடை குறையும்.

**சல்பர் பயன்படுத்துவது எப்படி?**

கொப்பரை தயாரிப்பில் சல்பர் என்ற கெமிக்கல்ஸ் (SULPHUR) பயன்படுத்துவது முக்கியமானது. ஒரு பாத்திரத்தில் 1/2 கிலோ சல்பர் போட்டு பற்ற வைத்தால், புகை வரும் அந்த புகை மூட்டத்தில் ஆயிரம் உடைந்த தேங்காயை ஒரு இரவு மூடி வைத்தால், தேங்காயின் ஈரப்பதம் சீக்கிரமாக குறைந்து விடும். பூசணமும் (FUNGUS) பிடிக்காது. தமிழகத்தில் தேங்காய் உற்பத்தியில் ஆண்டு முழுவதும் இந்த தொழிலை தங்கு தடையின்றி மேற்கொண்டால் லாபமே. இன்றைய விலை நிலவரப்படி ஒரு கிலோ கொப்பரை தேங்காய் 123 முதல் 155 வரை விற்கப்படுகின்றன. உயர்தர பந்து கொப்பரை (BALL COPRA) 250 முதல் 310 வரை விற்பனை செய்ய படுகிறது என்பது குறிப்பிடத்தக்க தகவல்.

**கவனிக்க வேண்டியவை?**

எக்காரணம் கொண்டு தண்ணிரில் நனைய விடக்கூடாது. எளிதாக பூசணம் பிடித்து விடும். நன்றாக காய்களை உலர்த்திட வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# பயிர் காப்பீட்டு திட்டத்தில் காப்பீடு செய்ய அழைப்பு!

ராணிப்பேட்டை, ஆக.5

ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அருணாகுமாரி விவசாயிகளுக்கு வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பில் 2026 - 27 ஆம் ஆண்டு காரீப் பருவத்தில் உளுந்து, நிலக்கடலை, பச்சைபயறு, துவரை ஆகிய பயிர்களை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தில் பயிர் காப்பீடு செய்யலாம் என தெரிவித்தார்.

புயல், கன மழை, வெள்ளம், வறட்சி, பூச்சி மற்றும் நோய் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பயிர்களின் மகசூல் பாதிக்கப்படும் சூழலில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பொருளாதார பாதுகாப்பு வழங்கும் நோக்கத்துடன் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பயிர் கடன் பெறும் மற்றும் கடன் பெறாத அனைத்து விவசாயிகளும் விருப்பத்தின் பேரில் பயிர் காப்பீடு செய்யலாம்.

2026 ஆம் ஆண்டில் சூப்பர் எல் நினோ நிகழ்வு காரணமாக வெப்பநிலை அதிகமாகவும், பருவமழை வழக்கத்தை விட குறையவும் வாய்ப்பு உள்ளது என்பதால் நெமிலி வட்டார விவசாயிகள் காரீப் பருவ பயிர் காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்யுமாறு நெமிலி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அருணா குமாரி கேட்டுக்கொண்டார்.

காரீப் பருவத்தில் உளுந்து, பச்சை பயறு, நிலக்கடலை, துவரை ஆகிய பயிர்களை பயிர் காப்பீடு செய்ய வரும் ஆகஸ்ட் 16ஆம் தேதி கடைசி நாளாகும். விவசாயிகள் தங்களது ஆதார் அட்டை, கணினி சிட்டா, நடப்பு ஆண்டு பயிர் அடங்கல், வங்கி கணக்கு புத்தகம் நகல் ஆகிய ஆவணங்களுடன் அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கிளைகள், கிராமிய வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், மற்றும் பொது சேவை மையங்களை அணுகி காப்பீடு செய்து கொள்ளலாம். ஒரு ஏக்கருக்கு காரீப் பருவம் நிலக்கடலை பயிருக்கு ரூ.644/. உளுந்து, பச்சை பயறு, துவரை ஆகிய பயறு வகை பயிர்களுக்கு ரூ.374/. பிரீமியம் செலுத்தி பயிர் காப்பீடு செய்யலாம் என கூறினார்.

# வெப்ப அலை விழிப்புணர்வு 2026

## வறட்சி காலங்களில் வீரியமான விதை முளைப்பிற்கு விதை நேர்த்தி முறைகள்

எல்நினோ நிகழ்வால் மழைப்பொழிவு பாதிக்கப்பட்டு வெப்ப நிலை அதிகமாகவும் அனல் காற்றும் வீசிக் கொண்டிருக்கிறது. இவ்வாறான வறட்சி காலங்களில் விதை முளைப்பு வீரியமாக அமைவதற்கும், குறைவான நீர் பாசனத்தில் விவசாயிகள் தங்கள் பயிர்களை பாதுகாக்கவும், விதை கடினப்படுத்துதல்



என்ற விதை நேர்த்தி முறையை பின்பற்றுமாறு செங்கல்பட்டு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் எம்.ஸ்டீபன் ஜெயக் குமார் கேட்டுக் கொண்டார்.

**செய்முறை**

● விதைகளை தேவையான நீர் அல்லது இரசாயனக் கரைசலில் ஒரு குறிப்பிட்ட கால அளவு ஊற வைக்க வேண்டும்.

● பிறகு விதைகளை எடுத்து நிழலில் உலர வைத்து பழைய ஈரப்பதத்திற்கு திரும்ப கொண்டு வர வேண்டும்.

● ஒவ்வொரு பயிருக்கும் விதைக்கடினப்படுத்துதலின் தொழில்நுட்பம் வேறுபடுகின்றது.

| வ. எண் | பயிர் | இரசாயனம் மற்றும் அளவு | செய்முறை |
|---|---|---|---|
| 1 | நெல் | 1 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு | 10 கிராம் உப்பை 1 லிட்டர் நீரில் கரைக்க வேண்டும். பிறகு 1 கிலோ விதையை 1000 மி.லி உப்புக்கரைசலில் 16 மணி நேரம் ஊற வைத்து முடிவில் பழைய ஈரப்பதத்திற்கே விதைகளை |
| 2 | உளுந்து<br>பச்சை பயறு | 100 ppm துத்தநாக சல்பேட்<br>100 ppm மாங்கனீசு சல்பேட் | 1000 மில்லி கிராம் உப்பை 1 லிட்டர் நீரில் கரைக்க வேண்டும். பிறகு 1 கிலோ விதையை 350 மி.லி உப்புக்கரைசலில் 3 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். முடிவில் விதை களை அதன் பழைய ஈரப் பதத்திற்கே திரும்ப கொண்டு வரவேண்டும். |
| 3 | கேழ்வரகு | 0.2 சதவீதம் சோடியம் குளோரைடு | 2 கிராம் உப்பை 1 லிட்டர் நீரில் கரைக்க வேண்டும். பிறகு 1 கிலோ விதையை 700 மி.லி உப்புக் கரைசலில் 6 மணி நேரம் ஊற வைக்க |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். முடிவில் விதை களை அதன் பழைய ஈரப்பதத்திற்கே திரும்ப கொண்டு வர வேண்டும். |
| 4 | நிலக்கடலை | 0.5 சதவீதம் கால்சியம் குளோரைடு | 5 கிராம் உப்பை 1 லிட்டர் நீரில் கரைக்க வேண்டும். பிறகு 1 கிலோ விதையை 300 மி.லி. உப்புக் கரைசலில் 4 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். முடிவில் விதை களை அதன் பழைய ஈரப் பதத்திற்கே திரும்ப கொண்டு வர வேண்டும். |

இதனை செங்கல்பட்டு வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்தார்.

## இராமநாதபுரம் வட்டாரத்தில் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்துரையாடல்

இராமநாதபுரம், ஆக.5

இராமநாதபுரம் மாவட்டம், குயவன்குடி கிராமத்தில் அமைந்துள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் மூலம் செயல் படுத்தப்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை 2025-26 திட்டத்தின் கீழ் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி 4.8.26 - 5.8.26 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு இராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் எஸ்.வாசுகி, தலைமை வகித்து நுண்ணீர் பாசனத்தின் நன்மைகள் மற்றும் நெல்லில் பூச்சியின் தாக்குதல் அறிகுறிகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து விளக்கி கூறினார். வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) கு.இராஜேந்திரன் முன்னிலை வகித்து நெல் சாகுபடியின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார்.

இராமநாதபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் உ.அம்பேத்குமார் வரவேற்றார். மேலும் வேளாண்மை துணை

இயக்குநர் (மாநிலத் திட்டம்) அமர்லால், சிறப்புரையாற்றினார். விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்துரையாடலில் கலந்து கொண்ட வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) இராஜா, உயிர் உரங்களின் முக்கியத்துவம் பற்றி விவசாயி களிடம் விரிவாக எடுத்துரைத்தார். வேளாண்மை உதவி இயக்குநர்(த.க) பி.ஜி.நாகராஜன் கலந்து கொண்டு மண்ணின் முக்கியத்துவம் பற்றியும் மற்றும் உரப் பயன்பாடுகள் பற்றியும் விவசாயிகளிடம் விரிவாக எடுத்துரைத்தார்.

வேளாண்மை உதவி இயக்குநர் (பயிர் காப்பீடு) கீதாஞ்சலி, பயிர் காப்பீடு பற்றி விவசாயிகளிடம் விரிவாக எடுத்துரைத்தார். விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்துரையாடலில் வேளாண்மை அலுவலர் (உழவர் பயிற்சி நிலையம்) சீதாலெட்சுமி மற்றும் இராமநாதபுரம் வட்டார வேளாண்மை அலுவலர் இரவிசந்திரன் கலந்து கொண்டனர்.

வேளாண் அறிவியல் நிலைய தலைவர் ராமகிருஷ்ணன் தலைமையில் உதவி பேராசிரியர்கள் முனைவர் விஜயராகவன், முனைவர் விஜயகுமார், முனைவர் கண்ணையன் உள்ளிட்ட விஞ்ஞானிகள் குழு மண் வள அமைப்பு, வறட்சியினைத் தாங்கி வளரும் ரகங்கள், பயிர் சாகுபடி, உயிர் உர விதை நேர்த்தி, பூஞ்சான விதை நேர்த்தி, ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை, ஒருங்கிணைந்த உர மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை மற்றும் பண்ணை இயந்திரங் களின் பயன்பாடு, காய்கறிகள் சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் அறுவடைக்குப் பின் விளை பொருட்களை மதிப்புக்கூட்டி தரமான பொருளாக விற்பனை செய்தல் ஆகிய தலைப்புகளில் தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு இராமநாதபுரம் வட்டாரத்திலிருந்து இரண்டு நாட்களில் 25 முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் இராமநாதபுர வட்டார தொழில்நுட்ப மேலாளர் ப.கோசலாதேவி நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இராமநாதபுரம் உதவி தொழில்நுட்ப மேலாளர் இராஜேஸ்குமார், ம.அபினாஸ்ரீ ஆகியோர் செய்திருந்தார்கள்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# திருவண்ணாமலை விதை பரிசோதனை நிலையத்தில் உயர் அதிகாரிகள் ஆய்வு



திருவண்ணாமலை, ஆக.5

திருவண்ணாமலை விதை பரிசோதனை நிலையத்திற்கு உயர் அதிகாரிகளான வேளாண்மை இணை இயக்குநர் தி.மலர்விழி, ராம் பிரபு, துணை இயக்குநர், காஞ்சிபுரம் விதைப்பரிசோதனை அலுவலர் திடீர் ஆய்வு மேற்கொண்டார். விதைப் பரிசோதனை அலுவலர், அனைத்து பதிவேடுகளும் பார்வையிட்டார். மேலும் Seed Blower உபகரணத்தை மூத்த வேளாண்மை அலுவலர் ஜெ.பத்மா, செயல்முறை செய்து காட்டினார்.

அது எப்படி உபயோகப்படுகிறது என்பது பற்றியும் அது எப்படி செயல்படுகிறது என்பது பற்றியும் செய்து காட்டினார். மேலும் Incubator, Hot Air Oven, Dehuller போன்ற உபகரணங்கள் எப்படி பயன்படுகிறது என்பதையும் செய்து காட்டினார். மேலும் முளைப்பு திறன் அறையை பார்வையிட்டார்கள். முளைப்புதிறன் அறையின் ஈரப்பத அளவையும் வெப்பநிலை தன்மையையும் கண்டு அறிந்தார்கள் மற்றும் காப்பு மாதிரிகள் அறையையும் பார்வையிட்டார்கள்.

விவசாயிகளுக்கு குறைந்த செலவில் தரமான விதைகளை தருவதே நம் விதை பரிசோதனையின் நிலையத்தின் நோக்கம் என்பதை எடுத்துரைத்தார்கள். ஆய்வு மேற்கொள்ளும் போது வேளாண்மை அலுவலர் இரா.கலைச்செல்வி உடன் இருந்தார்.




# துவரை நடவு - ஒரு பார்வை

நம் அன்றாட உணவில் தேவையான புரதச்சத்து அளிக்கக்கூடிய பயறு வகைகயில் துவரை முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழர் சமையலிலும் துவரம் பருப்பு முக்கிய உணவுப் பொருளாக விளங்குகிறது. துவரையானது வளரும் நாடுகளில் உள்ள குழந்தைகளுக்கு தேவையான புரதச்சத்தில் மூன்றில் ஒரு பங்கினைக் அளிக்கிறது. துவரையில் "பி" விட்டமின்கள், தாது உப்புகள், கார்போஹைட்ரேட்டுகள், புரதச்சத்து, நார்ச்சத்து போன்றவையும் காணப்படுகின்றன.

கிராமத்துல, 'வாழையை வச்சி வழுக்கி விழுந்தவன் இருக்கான். ஆனா, துவரையைத் தூவி துவண்டு போனவன் கிடையாது' என்ற சிறப்புடைய துவரையை பயிரிட ஆடிப்பட்டம் உகந்ததாகும். செம்மண்ணில் நன்குவளரும் தன்மை கொண்டது. பயறு தனிப் பயிராகவும், கலப்புப்பயிராகவும், ஊடு பயிராகவும் பயிரிடப்படுகிறது. கோ 6, வம்பன் 2, எல்.ஆர்.ஜி 41 கோ (துவரை) 7, வம்பன் (துவரை) 3, ஏபிகே 1 ஆகியவை துவரை இரகங்கள் ஆகும். துவரை விதைப் பதற்கு முன் விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். விதைப் பதற்கு 24 மணி நேரத்திற்கு முன் ஒரு கிலோ விதைக்கு ட்ரைக்கோ டெர்மா விரிடி 4 கிராம் கொண்டு விதை நேர்த்தி செய்யவும். பூஞ்சைக்கொல்லி (அல்லது) உயிர்க்கட்டுப்பாட்டுக் காரணி கொண்டு விதை நேர்த்தி செய்த பின் 24 மணி நேரம் கழித்து ரைசோபியல் கல்சர் சி.ஆர்.ஆர் / சி.பி.ஆர், பாஸ்போ பாக்டீரியா (பேசில்லஸ் மெகாடீரியம்) மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தயாரித்த பி.ஜி.பி.ஆர் ஒரு பாக்கெட் (200 கி) கொண்டு விதை நேர்த்தி செய்யலாம்.

துவரையை நடவு செய்து பயிர் எண்ணிக்கையை பராமரித்து நல்ல லாபம் பெறலாம். நீண்ட கால துவரை வகைகளை மட்டும் தேர்வு செய்ய வேண்டும். மானாவாரி அல்லது பாசன நிலையில் ஆகஸ்ட் மாதத்திற்குள் நடவு செய்ய வேண்டும். துவரை நடவு செய் வதற்குத் தேவையான நாற்றங்காலை குழித்தட்டு மற்றும் பாலித் தீன் பைகளில் வளர்த்து நடவு செய்யலாம். 6x4 அங்குல அளவு மற்றும் 200 மைக்ரான் தடிமன் கொண்ட பாலித்தீன் பையில் நிலத்தின் மண்:மணல்:தொழுவுரம் ஆகியவற்றை 1:1:1 என்றளவில் நிரப்பி நீர் தேங்குவதை தடுக்க 3-4 துளைகள் இடவேண்டும் அல்லது குழித்தட்டு நாற்றங்கால் முறையில் 200 காஜ் கருப்பு நிற குழித்தட்டுகளில் மக்கிய தென்னை நார்க்கழிவுகள் மற்றும் மணல் நிரப்பி விதைகளை விதைக்க வேண்டும். விதையை 0.2% கால்சியம் குளோரைடில் ஒரு மணி நேரம் ஊறவைத்து பின்னர்

விதையை கடினமாக்க 7 மணி நேரம் நிழலில் உலர்த்த வேண்டும். கடினமான விதைகளை 4 கி / கிலோ மற்றும் 100 கிராம் ரைசோபியம் மற்றும் 100 கிராம் பாஸ்போபாக்டீரியம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதைகளை பாலித்தீன் பையில் 1 செ.மீ ஆழத்தில் விதைக்க வேண்டும். விதைப்பு செய்யப்பட்ட பைகள் நிழலான இடங்களில் வைத்து 30-40 நாட்கள் பராமரிக்கப்பட்டு நடவுக்கு பயன்படுத்தப்படுகின்றன. நடுவதற்கு சில நாட்களுக்கு முன் இளம் வெயிலில் நாற்றுக்களை வைத்து கடினப்படுத்தி பின் நடவு செய்ய வேண்டும். நல்ல தரமான துவரை பயிறு விதையானது 98% சுத்தத்தன்மை, 9% ஈரப்பதம் மற்றும் 75% முளைப்புதிறன் உடன் இருத்தல் வேண்டுமென மதுரை விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் சி.கமலாராணி மற்றும் பெரி.இராமலட்சுமி தெரிவித்தனர்.




# நவீன வேளாண்மையில் தாவர பதில்கள் மற்றும் தழுவல் முறைகள்


## சுருக்கம் (Abstract)

நவீன வேளாண்மை காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் அழுத்தங்கள் மற்றும் உணவு தேவையின் அதிகரிப்பு போன்ற முன்னெப்போதும் இல்லாத சவால்களை எதிர்கொள்கிறது. இத்தகைய மாற்றங்களுக்கு தாவரங்கள் எவ்வாறு பதிலளித்து தழுவுகின்றன என்பதை புரிந்து கொள்ள பயிர் உடலியல் முக்கிய பங்காற்றுகிறது. "நவீன பயிர்வினையியல்" என்பது பாரம்பரிய உடலியல் அறிவை நுண்ணறிவு வேளாண்மை, ஜீனோமிக்ஸ் மற்றும் நுண்ணுயிரி தொடர்புகள் போன்ற நவீன தொழில்நுட்பங் களுடன் இணைத்து பயிர்களின் விளைச்சல் மற்றும் சகிப்புத் தன்மையை மேம்படுத்தும் அணுகுமுறையாகும். இக்கட்டுரை தாவரங்களின் சுற்றுச்சூழல் அழுத்தங்களுக்கு எதிரான பதில்கள், உடலியல் தழுவல் முறைகள் மற்றும் நிலையான வேளாண்மைக் கான நவீன அணுகுமுறைகளை ஆய்வு செய்கிறது. மேலும், உடலியல் செயல்முறைகளையும் புதுமையான தொழில்நுட்பங் களையும் ஒருங்கிணைப்பதன் மூலம் எதிர்கால உணவு பாதுகாப்பை உறுதி செய்யலாம் என்பதை வலியுறுத்துகிறது.


## 1. அறிமுகம் (Introduction)



பயிர் வினையியல் என்பது தாவரங்களின் வளர்ச்சி, மேம்பாடு மற்றும் விளைச்சலை பாதிக்கும் உட்புற செயல்முறைகளைப் பற்றிய ஆய்வாகும். சமீப காலங்களில் காலநிலை மாற்றம் வேளாண்மையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வெப்பநிலை மாற்றம், நீர் கிடைக்கும் அளவு குறைவு மற்றும் வளிமண்டல கார்பன் டைஆக்சைடு அளவு உயர்வு போன்றவை பயிர்களின் வளர்ச்சியை பாதிக்கின்றன. இந்த மாற்றங்கள் வறட்சி, உப்புத்தன்மை மற்றும் வெப்ப அழுத்தம் போன்ற சூழ்நிலைகளை உருவாக்கி, நேரடியாக விளைச்சலை குறைக்கின்றன. "நவீன பயிர் வினையியல்" என்பது தாவர பதில்களைவினையியல், உயிர் வேதியியல் மற்றும் மூலக்கூறு நிலைகளில் புரிந்து கொண்டு, அதனை நவீன தொழில் நுட்பங்களுடன் இணைக்கும் ஒரு அணுகுமுறையாகும்.

## 2. சுற்றுச்சூழல் காரணிகளுக்கு தாவர பதில்கள்

### 2.1 வெப்பநிலை அழுத்தம்

வெப்பநிலை தாவர வளர்ச்சியை
தீர்மானிக்கும்முக்கிய காரணியாகும்.

அதிக வெப்பநிலை:
- ஒளிச்சேர்க்கை குறைவு
- சுவாசம் அதிகரிப்பு
- புரத சேதம்

உதா 1 : சூழல் காரணிகளுக்கு தாவரங்களின்
குறைந்த வெப்பநிலை : பதில்கள் வெப்பநிலை அழுத்தம்
- என்சைம் செயல்பாடு பாதிப்பு
- செல்மெம்பர் நிலைத்தன்மை குறைவு

தாவரங்கள் தங்கள் வளர்சிதை மாற்றம் மாற்றி அழுத்த புரதங்கள்உருவாக்கி தழுவுகின்றன.

### 2.2 கார்பன் டைஆக்சைடு ($CO_2$) தாக்கம்


கார்பன் டைஆக்சைடுஅளவு அதிகரிப்பதால்
சில பயிர்களில் ஒளிச்சேர்க்கை அதிகரிக்கலாம்.

ஆனால் :
- ஊட்டச்சத்து தரம் குறையலாம்
- ஸ்டோமாட்டா செயல்பாடு மாறும்
- நீர்பயன்பாட்டு திறன் பாதிக்கப்படும்

உதா 2 : கார்பன் டைஆக்சைடு ($CO_2$)தாக்கம்

### 2.3 நீர் அழுத்தம் (வறட்சி & வெள்ளம்)

உதா 3 : சுற்றுச்சூழல் காரணிகளுக்கு தாவர பதில்கள் நீர் அழுத்தம் (வறட்சி & வெள்ளம்)




வறட்சி :
- செல்கள் விரிவு குறைவு
- ஸ்டோமாட்டா மூடல்
- ஒளிச்சேர்க்கை குறைவு

வெள்ளம் :
- வேர் பகுதியில் ஆக்சிஜன் குறைவு
- ஊட்டச்சத்து உறிஞ்சல் குறைவு

தாவரங்கள் வேர் அமைப்பு மாற்றம், சவ்வூடு பரவல் சரி செய்தல் மற்றும் ஹார்மோன் சிக்னலிங் மூலம் பதிலளிக்கின்றன.

### 3. வினையியல்தழுவல் முறைகள்

#### 3.1 ஒளிச்சேர்க்கை சரிசெய்தல்

அழுத்தநிலையில் தாவரங்கள் :

- குளோரோபில் அளவை மாற்றுகின்றன
- ஸ்டோமாட்டா திறப்பு கட்டுப்பாடு
- என்சைம் செயல்பாட்டை மாற்றுகின்றன

உதா 4 : ஒளிச்சேர்க்கை சரிசெய்தல்

#### 3.2 ஹார்மோன் ஒழுங்குமுறை

- அப்சிசிக் அமிலம் (ABA) : வறட்சியில் ஸ்டோமாட்டா மூடல்
- சைட்டோகினின் (Cytokinin) : செல்கள் வளர்ச்சி
- ஆக்சின் (Auxin) : வேர் வளர்ச்சி

#### 3.3 வினைத்திறன் மிக்க ஆக்ஸிஜன் இனங்கள் (ROS) மற்றும் ஆக்ஸிஜனேற்றம் அமைப்பு

அழுத்த நிலையில் வினைத்திறன் மிக்க ஆக்ஸிஜன் இனங்கள் உருவாகி செல்களை சேதப்படுத்தும்.

தாவரங்கள் இதை கட்டுப்படுத்த :

- சூப்பராக்சைடு டிஸ்முடேஸ் (SOD),
- கேடலேஸ், பெராக்ஸிடேஸ்
- அஸ்கார்பேட், குளுதாதயோன் பயன்படுத்துகின்றன.

உதா 5 : வினைத்திறன் மிக்க ஆக்ஸிஜன் இனங்கள் (ROS) மற்றும் ஆக்ஸிஜனேற்றம் அமைப்பு



#### 3.4 சவ்வூடு பரவல்

தாவரங்கள் :

- புரோலின்
- கிளைசின் பெடைன்
- சர்க்கரைகள்

சேர்த்து செல்களின் நீர்ச்சத்தை பாதுகாக்கின்றன.

#### 3.5 வேர்-மேல் பகுதி தொடர்பு

- வறட்சியில் ஆழமான வேர் வளர்ச்சி
- ஊட்டச்சத்து உட்கொள்ளல்அதிகரிப்பு

4. நுண்ணுயிரிகளின் பங்கு (PGPR)

PGPR (தாவர வளர்ச்சியை ஊக்குவிக்கும் ரைசோபாக்டீரியா) :

- ஊட்டச்சத்து உறிஞ்சுதல்மேம்பாடு
- நீர் பயன்பாட்டுத் திறன்அதிகரிப்பு
- ஹார்மோன் ஒழுங்குமுறை
- மன அழுத்த சகிப்புத்தன்மைஉயர்வு

**5. நவீன அணுகுமுறைகள்**

**5.1 துல்லியமான விவசாயம்**

- மண் உணரிகள்
- ட்ரோன்கள் மற்றும் செயற்கைக்கோள்கள்
- NDVI மூலம் பயிர் ஆரோக்கியம் கண்காணிப்பு

**5.2 மரபியல் மற்றும் மூலக்கூறு நுட்பங்கள்**

- CRISPR மரபணு திருத்தம்
- மார்க்கர் உதவியுடன் தேர்வு
- டிரான்ஸ்கிரிப்டோமிக்ஸ்

**5.3 காலநிலைக்கேற்ற விவசாயம்**

- நிலையான நீர்ப்பாசனம்
- அழுத்தத்தைத் தாங்கக்கூடிய வகைகள்
- வளத் திறன்மிக்க விவசாயம்

**6. வினையியல் மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு**

இது உதவும் :

- பயிர் கணிப்பு
- வளங்களை மேம்படுத்துதல்
- மகசூல் நிலைத்தன்மை



**7. எதிர்கால நோக்கங்கள்**

- செயற்கை நுண்ணறிவு
- IoT
- மைக்ரோபயோம் பொறியியல்
- பருவநிலை மாற்றங்களைத் தாங்கக்கூடிய பயிர்கள்

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

## 8. முடிவு (Conclusion)

ஸ்மார்ட் பயிர் வினையியல் என்பது நவீன வேளாண்மையில் முக்கியமான அணுகுமுறையாகும். இது தாவர வினையியல் அறிவையும் நவீன தொழில்நுட்பங்களையும் இணைத்து பயிர்களின் விளைச்சல் மற்றும் சகிப்புத்தன்மையை மேம்படுத்த உதவுகிறது. காலநிலை மாற்றம் போன்ற சவால்களை சமாளிக்க இது அவசியமானது.



### மேற்கோள்கள்


1. Ahmad,P., மற்றும் குழு. (2023). பயிர் தாவரங்களில் அசைவற்ற (Abiotic) அழுத்தத்திற்கான தழுவல் மற்றும் சகிப்புத் தன்மை செயல்முறைகள். தாவர அறிவியலில் எல்லைகள்.

2. Interes Journals. (2023). பயிர் வினையியல் சமீபத்திய முன்னேற்றங்கள் : ஒரு விமர்சன ஆய்வு.

3. IRJ Web. (2023). காலநிலை மாற்றம் பயிர் உடலியலில் ஏற்படுத்தும் தாக்கம் மற்றும் தழுவல் முறைகள் : ஒரு விமர்சன ஆய்வு.

4. அறிவியல் ஆராய்ச்சி மற்றும் அறிக்கைகள் சஞ்சிகை. (2025). காலநிலை தீவிரங்கள் மற்றும் பயிர் விளைச்சல் : வினையியல் செயல்முறைகளின் ஒருங்கிணைப்பு.

5. MDPI வேளாண்மை. (2023). காலநிலை மாற்ற சூழலில் பயிர்களின் தழுவல் முறைகள்.

6. அறிவியல் நேரடி. (2026). PGPR பயன்படுத்தி பயிர் சகிப்புத்தன்மையை மேம்படுத்துதல் : ஒரு விமர்சன ஆய்வு.


தகவல் : ***கன்மணி ஏ, உதவி பேராசிரியர், பயிர் வினையியல், பயிர் மேலாண்மைத் துறை, ஜெயப்ரியா ச, மாலினி மு, மதுமிதா ம, நிகழ்யா ப மற்றும் ஓவியா தி, IV ஆண்டு பி.எஸ்சி (ஹானர்ஸ்) வேளாண்மை மாணவிகள், இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கழகம், துறையூர். தொடர்பு ஆசிரியர் மின்னஞ்சல் முகவரி : kanmaniphysiology@gmail.com***

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741